REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம். ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 14உ வெள்ளி (29—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 15உ சனி (30—11—57) [இதழ் 144

நேபாளத்துக்கு அரிசி தானமாம்!

புதுடில்லி, நவ. 28—

நேப்பாள நாட்டுக்கு, 10,000 மணங்கு அரிசி இனமாக வழங்கப்பட்டிருக்கிறதாம்.

மேலும், உணவு நிலையில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையைச் சரிக்கட்டுவதற்காக நேப்பாளத்துக்கு இந்திய சர்க்கார் 2,500 டன் அரிசியை விலை அடிப்படையில் அனுப்பியுள்ளனராம்!

இதைத் தவிர, திரும்பப்பெறும் அடிப்படையில் 3,100 டன் அரிசி அனுப்பப்பட்டோ அல்லது அனுப்ப வாக்களிக்கப் பட்டோ இருக்கிறதாம்!

உணவு—விவசாய அமைச்சர் ஏ. பி. ஜெயின், மாநிலங்கள் சபையில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

வீதிதோறும் அறப்போர் பாசறை அமையும்

இளமங்கையாக வந்த இந்தியை விரட்டினேம் அன்று!

இன்று கிழடு தட்டிவரும் இந்தியை ஏற்பரோ, தமிழர்?

ஜனநாயகம் பூத்துக்குலுங்கும்சோலை தி.மு.க.-அதில் துளியும் பலாத்கார வாடை வீசாது

சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டையில்

மு. கருணாநிதி முழக்கம்

"இன்று நாம், 'இந்தியை எதிர்த்திட எத்தனைப் பேர் தயாராயிருக்கிறார்கள்' என்ற கணக்கை எடுக்கிறோம்; வெறும் பட்டியல் காட்ட அல்ல! பட்டியலைக் காட்டிவிட்டு, அர்த்த இராத்திரியிலே போராட்ட நிறுத்த அறிக்கை கொடுத்துவிட அல்ல! அத்தனைப் பேரும் உறுதியோடு நின்று இந்தியை எதிர்க்க வேண்டும். இன்று இல்லையேல் இன்னொருநாள், இந்திப் படையெடுப்பு நம்மைத் தாக்கியே தீரும் எனவே, இன்றைக்கே நம்மை நாம், 'இந்தியை எதிர்க்கத் தயாரா?' என்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

"படை கிளம்ப வேண்டுமென்றால் பாசறை அமைத்து, கேடயமும் கட்கமும் ஏந்தி வீரர்கள் புறப்படவேண்டும் என்று அல்ல! வீரக்காளையர்கள் தமிழகத்தில் என்றும் இருப்பர்! தெருதோறும் பாசறையாக மாறும் என்பது தெரியும்! முதலில் உள்ளத்தைத் தயார் படுத்திக்கொண்டு எத்தனைத் தாளமுத்து-நடராசன்கள் இருக்கிறார்கள் என்ற அந்தக் கணக்குதான் தேவை!

"நாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைச் சந்திக்காதவர்கள் அல்ல! அந்தப் போராட்டத்திலே நாம் சிந்திய முத்துக்களில் இரண்டுதான் தாளமுத்து-நடராசன். அந்தப் போராட்டத்திலேதான் நம் அண்ணா ஒரு ஒளிமுத்தாகப் பிரகாசித்தார். 1,000 பேருக்குமேல் சிறைக்கோட்டம் புகுந்தார்கள். அண்ணாவுக்கு 6 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை அப்பொழுதுதான் கிடைத்தது சாதுக்களும் சன்னியாசிகளும், மாணவர்களும் இளைஞர்களும், பெண்டிரும், பாலரும், பெரியவர்களும் இன்னோரன்ன பலரும் சிறைபுகுந்தார்கள்.

"தாங்கள் பெற்றெடுத்த இருசெல்வங்கள் இன்று வருவார்கள் என்று, வீட்டு வாசலிலே நின்று வழி பார்த்துக்கொண்டு இரு நரைமூதாட்டிகள் ஆலத்தியும் கையுமாக, 'எங்கள் பிள்ளைகளுக்கு இன்று விடுதலையாமே; அவர்களை வரவேற்கத்தான் நிற்கிறோம்' என்று சொல்ல, அந்த நேரத்தில் ஒருவர் ஓடிவந்து, 'ஆம், ஆம்; உங்கள் பிள்ளைகளுக்கு சிறையிலிருந்து மட்டுமல்ல—இந்த உலகத்திலிருந்தே விடுதலை கிடைத்துவிட்டது' என்று கூற, அந்த நரைமூதாட்டிகள், பின்னர், கையிலே பிணமேந்தி, 'தமிழ் வாழ்க, தமிழ் வாழ்க'— வீழ்க இந்தி, வீழ்க இந்தி'—என்று எழுப்பிய முழக்கம் இன்றும் எங்கள் காதிலே விழுந்துகொண்டுதானிருக்கின்றது.

"அத்தனை இடர்பாடுகளையும், இன்னல்களையும் தாங்கிக்கொண்டுதான் அப்பொழுது நாங்கள் இந்தியை எதிர்த்தோம்"

—இவ்வாறு தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. அவர்கள், சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டையில், 15-11-57-ல் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து நம் திராவிட நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லும்போது நம் திராவிட நாடு வடநாட்டின் ஒரு பகுதியாக இதுவரை இருந்துவந்து, அதை இன்று நாம் பிரித்துக்கேட்கிறோம் என்பதாக அர்த்தமல்ல!

"திராவிட நாடு என்றுமே ஒரு தனி நாடுதான்; தொன்று தொட்டு தனித்தியங்கியது; ஆங்கிலேயர்காலத்திலேதான் வடநாட்டோடு அது இணைக்கப்பட்டது; துப்பாக்கி முனையிலே அது ஒட்டி வைக்கப்பட்டது. இரு பெரும் நாடுகளை இணைத்துத்தான் பிரிட்டிஷ்காரன் ஆண்டான்; இப்பொழுது நாம் நமது நாட்டை நமக்குக் கேட்கிறோம்.

"நம் திராவிட நாடு வளமிக்க நாடு! வற்றாத ஆறுகளும், கனி குலுங்கும் சோலைகளும், பூமிக்குள்ளே தங்கமும், கடலிலே முத்தும் கொண்ட நாடு! யவனத்துடனும், ரோமாபுரியுடனும் வாணிபம் செய்தவர்கள், நாம்! பண்டை வரலாறு நமக்குத் தரும் வீரம், அந்த வீரத்தோடு சேர்ந்த விவேகம், அது தரும் இன்பத் திராவிடமாம் வெற்றி—நம் கண் முன்னே புலனாகிறது.

"திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும் முயற்சி; செய்துவரும் காரியங்களெல்லாம், தலைவர்கள் இருக்கின்ற காலத்தில் மட்டும் பயனளிக்க வேண்டும் என்று தற்காலிகக் கணக்குப் போட்டுச் செய்யவில்லை; அரசியல் வாண வேடிக்கை நடத்திவிட்டு ஓய்ந்து விடுவதற்கல்ல; 'நமக்குப் பின்னாலும் மக்கள் இருப்பார்கள்—எதிர்காலத்திற்கும் நிரந்தரமான பலன்

கிடைக்க வேண்டும்' என்பதற்காகவே தி. மு. கழகம் பணியாற்றிவருகிறது.

"நாங்களெல்லாம் சட்ட மன்றத்திலே நுழைந்தவுடனே வெளியுலகில் எங்கள் பணி கொஞ்சமும் குறைந்துவிடவில்லை.

"நமது என். வி. நடராசன் அவர்கள் வெற்றி பெறவில்லை; அவருக்குப் பதில் காங்கிரசைச் சேர்ந்த ஒரு அம்மையாரை—இந்தப் பேட்டை வாசிகளாகிய நீங்

(4-ம் பக்கம் பார்க்க)

வழக்கம்போல வசைமாரி பொழிகிறார் பண்டிதர்!

காட்டுமிராண்டித்தனமானது என ஏசுகிறார் தி. க. கிளர்ச்சியை!

புதுடில்லி, நவ. 28—

திராவிடர் கழகத்தின், அரசியல் சட்ட எரிப்புக் கிளர்ச்சியை வழக்கம்போல பண்டிதர், 'காட்டுமிராண்டித்தனமானது' என்று ஏசியிருக்கிறார்!

'விளைவுகளைப்பற்றிக் கவலைப் படாமல், எந்த ஒரு நாகரீக சமுதாயமும் இதனை அனுமதிக்கப்போவதில்லை' என்றும் அவர் கூறினாராம்!

"சென்னை சர்க்கார் இவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை; எங்களிடம் உதவி கோர வேண்டிய அவசியம் இருக்குமென நான் கருதவில்லை; அப்படிக் கேட்டால் தருவதற்கு நம்மிடம் ஏராளமான உதவி இருக்கிறது" என்றும் அவர் பேசியிருக்கிறார்!

"சென்னை, இந்தியாவிலேயே பல வகையாலும் புத்திசாலித்தனமான மாநிலம்; நல்ல அறிவு வளர்ச்சி பெற்ற மாநிலம்; அங்கு, இந்தக் காலத்திலேகூட சிலர் இன்னும் தங்கள் சிந்தனையைப்பொறுத்து, காட்டுமிராண்டிக் காலத்தில் வாழ்வதைக் கண்டுதான் நான் ஆச்சரியப்படுகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை சர்க்காருக்கு பெரியார் எச்சரிக்கை

கைது செய்தோரை விடுதலை செய்யக் கோரிக்கை

திருச்சி, நவ. 28—

மாநில சர்க்கார் கேட்டால், தருவதற்கு உதவி நிறைய இருக்கிறது என்று அச்சுறுத்துகிற பண்டிதருக்கு பெரியார் அவர்கள் பதில் தந்திருக்கிறார்!

'நேரு சர்க்காரைவிட எனக்கு பொறுப்பு அதிகம் உண்டு' என்பதாக நேருவுக்கு பெரியார் பதில் தந்ததாகத் தெரிகிறது.

'திராவிடர் கழகம் காட்டுமிராண்டித் தனமானது' என்று பண்டிதர் ஏசியதையும் பெரியார் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

திருச்சியில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் பெரியார் அவர்கள், கைது செய்யப்பட்ட சுமார் 2000 தொண்டர்களையும் விடுதலை செய்யாவிட்டால், இந்த மந்திரிசபை என்ன ஆகும் என்பது எனக்குத் தெரியாது' என்று, சர்க்காரின் அடக்குமுறைப் போக்கினை வன்மையாகக் கண்டித்திருப்பதாகத் தெரிகிறது.

சர்க்கார் கூட்டிய சர்வகட்சி மாநாடு

இந்தியாவின் ஆட்சிமொழியாகத் திணிக்கப்படும் இந்திபற்றி ஆலோசிக்க சென்னை சர்க்கார் கடந்த 27—11—57-ல் கூட்டிய மாநாட்டில் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர்கள் அமர்ந்திருக்கும் காட்சி.

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 29—11—57 வெள்ளி

கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று!

சேலம் மாவட்டத்தில் மண்ணுக்கடியில் புதைந்துகிடக்கும் இரும்புக் கனிப்பொருளைத் தோண்டியெடுத்துத் தொழில்படுத்த உருக்குத் தொழிற்சாலை ஒன்று வேண்டும் என்பது, தமிழ் மக்களின் நீண்டநாள் விருப்பமாகும். தமிழ் மக்களின் ஒருமித்த கோரிக்கை இது. அரசியல் கட்சி வேற்றுமைகள், இக்கோரிக்கையில் குறுக்கிடவில்லை.

இருந்தாலும், டெல்லியில் கோலோச்சிவரும் 'நம்மவர்' ஆட்சி, சேலத்தில் கிடைக்கப்பெறும் இரும்புக் கனிப்பொருளிலிருந்து உயர்ந்த ரக உருக்கிரும்பை உருவாக்க முடியாது என்று, உருக்கு ஆலை ஒன்று வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஒருமனப்பட்ட கோரிக்கைக்கு, துளியும் பொருந்தாத சமாதானம் ஒன்றைக் கூறியது. சேலத்தில் கிடைக்கப்பெறும் கனிப் பொருள், வடநாட்டுப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் கனிப்பொருளைவிட உயர்ந்ததாக இல்லையென்றாலும், தாழ்ந்ததாக இல்லை என்ற நிபுணர்களின் கருத்தை எடுத்துக் காட்டி, டெல்லி 'நம்மவர்' ஆட்சிக்கூற்றை அம்பலப்படுத்தினர் தமிழ் மக்கள்.

சேலத்தில்உருக்குத்தொழிற்சாலை ஒன்றினைத் துவங்க, அதற்கு முக்கியத் தேவையாக உள்ள நிலக்கரி சேலத்துக்கருகில் இல்லையே—மிகத் தொலைவில் உள்ள வடநாட்டுப் பகுதிகளிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவந்து சேலம் இரும்புக் கனியை உருக்குவது என்பது இலாபகரமானதாக இருக்க முடியாது--எனவே, சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை வேண்டும் என்ற தமிழ் மக்களின் [...] டெல்லி 'நம்மவர்' ஆட்சியை கிட்டி போட்டனர் தமிழ் மக்கள்.

இவ்வேண்டுகோள் விடப்பட்ட நேரம் தேர்தல் நேரம். எனவே, நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பதில் வெற்றி ஏற்படட்டும்—பிறகு சேலம் உருக்குத் தொழிற்சாலைபற்றி ஆராயலாம் என்று டெல்லி சமாதானம் கூறியது.

இவ்வாறு சமாதானம் கூறிய அதே நேரத்தில், நெய்வேலியில் வெட்டி எடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியை எது எதற்குப் பயன்படுத்துவது என்று ஆராய்ந்து டெல்லி விளக்கமான திட்டம் ஒன்றையும் தீட்டி இருக்கின்றது. அதில் சேலம் உருக்குத் தொழிற்சாலை நீங்கலாக மற்றவை அனைத்தும் இடம் பெற்றுள்ளன.

கூடுமானவரை பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுக்கும் நெய்வேலித் திட்டம் வெற்றி பெறும் கட்டத்தை அடைந்திருக்கிறது. இன்னும் இரண்டொரு ஆண்டுகளில் பழுப்பு நிலக்கரியை ஏராளமாக வெட்டியெடுப்பது நிச்சயமாகும். எனவே, சேலத்தில் முதல்தரமான உருக்குத் தொழிற்சாலை துவங்கப்படவில்லையானாலும் ஒரு இரும்புத் தொழிற்சாலையையாவது துவங்கவேண்டும் எனத் தமிழ் மக்கள் சார்பில் சேலம் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள், டெல்லி 'நம்மவர்' ஆட்சியிடம் கோருகின்றனராம்.

அந்த அளவுடனும் அவர்கள் இருந்துவிடவில்லையாம். பழுப்பு நிலக்கரியைக் கொண்டு சாதாரண இரும்புத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்குவதற்கும் டெல்லி 'நம்மவர்' ஆட்சி [...]

[...] வேற்றுவதற்கில்லைஎன டெல்லி 'நம்மவர்' ஆட்சி சொல்ல முன்வந்தது.

'நம்மவர்' ஆட்சியின் இந்த சமாதானத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் மீண்டும் பன்னிப் பன்னி உருக்குத் தொழிற்சாலை கோரிக்கையைத் தமிழ் மக்கள் வற்புறுத்தி வரலாயினர்.

இந்தத் தொடர்பில் நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு சேலம் உருக்குத் தொழிற்சாலையை இயங்கச் செய்யலாம் என்று தமிழ் மக்கள் வாதிட முன்வந்தனர். பழுப்பு நிலக்கரியில் எரிபொருள் குறைவு — அதைக் கொண்டு உருக்குத் தொழிற்சாலையை இயக்குவது என்பது பெருஞ்செலவாக முடிவுறும். எனவே, பழுப்பு நிலக்கரியும் உருக்குத் தொழிற்சாலைக்கு உதவவே உதவாது என்று டெல்லி 'நம்மவர்' ஆட்சி ஈரொட்டாக சமாதானம் கூறியது.

இதற்கும் தமிழ் மக்கள் முயற்சி குன்றிவிடவில்லை. நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணித்தே தீர வேண்டும் என, [...]

[...] பாம்தா என்ற அச்சம் அவர்களுக்கே, வேண்டுகோள் விடும்பொழுதே ஏற்பட்டிருக்கிறது.

எனவே அவர்கள், 'சேலம் மண்ணில் புதைந்து கிடக்கும் இரும்புக் கனிப்பொருளை வெட்டி எடுத்து, ஜப்பானுக்கு ஏற்றுமதியாவது செய்யக் கூடாதா?' என, டெல்லி 'நம்மவர்' ஆட்சியிடம் முறையிட முன்வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. இவர்களின் இந்த முறையீட்டுக்கு ஓரளவு பயன் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கவும்படுகிறதாம்.

அந்தோ! பரிதாபம்! எத்தகைய சரிவு? ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியிலும் எதிர்பார்க்க முடியாத பெரும் சரிவை, டெல்லி 'நம்மவர்' ஆட்சி தமிழ் மக்கள் மீது திணித்திருக்கிறது!

உருக்குத் தொழிற்சாலையில் துவங்கி, கிடைத்தற்கரிய இரும்புக் கனிப் பொருளை ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கோரும்—அதற்கும் அனுமதி கிட்டுமோ கிட்டாதோ என அஞ்சி அஞ்சிக் கோரும்—இழிநிலைக்கு, தமிழ் மக்கள் இன்று வந்துள்ளனர்!

கழுதை தேய்ந்துகட்டெறும்பான கதைபோல இருக்கிறது, சேலம் உருக்குத் தொழிற்சாலை கோரிக்கை, டெல்லி 'நம்மவர்' ஆட்சியில்!

வெள்ளி சுத்திகரிப்பு தொழிற்சாலை

ரூ.1 கோடி செலவில் கல்கத்தாவில் அமைகிறது

புதுடில்லி, நவ. 26—

கல்கத்தாவில் வெள்ளி சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்று நிரவப்பட்டிருக்கிறதாம்.

ரூ. 1·19 கோடி செலவில் அமைந்துள்ள இது, 1958 மத்தியில் வேலை துவங்குமாம்.

இத்தகவல் மக்கள் சபையில் தரப்பட்டுள்ளது.

"அமெரிக்காவிடம் வாங்கியுள்ள வெள்ளிக் கடனைத் திருப்பித் தந்த பிறகு இந்தத் தொழிற்சாலைக்கு அவசியமிராது" என்று ஒரு உறுப்பினர் கூறியபோது, உதவி நிதி மந்திரி பகத், அமெரிக்காவின் கடனைத் தந்த பிறகும், நான்கு உலோகக் கலவையால் ஆன நாணயங்கள் உருக்கப்பட்டு வெள்ளி பிரித்தெடுக்கப்பட வேண்டியிருக்கும் என்றும், அதற்கு இத்தொழிற்சாலை உபயோகப்படும் என்றும், மேலும், செம்பு உருக்கி சுத்திகரிக்கச் செய்யவும் இத்தொழிற்சாலை பயன்படும் என்றும், உருக்கப்பட வேண்டிய நான்கு உலோகக் கலவையாலான நாணயங்கள் இன்னும் பல ஆண்டுகளுக்கு வேலை தரும் என்றும் கூறியிருக்கிறார்.

தமிழ் நாட்டுத் திட்டங்களுக்கு உதவி

மேற்கொண்டு நிதி ஒதுக்குவது பற்றி டெல்லி ஆராய்கிறதாம்!

புதுடில்லி, நவ. 27—

சென்னையின் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிகமாக எவ்வளவு தொகை ஒதுக்குவது என்பது குறித்து இந்திய அரசாங்கம் ஆராய்ந்துவருகிறதாம்.

தென் மாநிலப் பிரதிநிதிகள் மாநாடு, இத்திட்டங்களுக்கு மேற்கொண்டு ரூ. 8,64,000 ஒதுக்கலாம் என்று கூறியுள்ளதாம்.

மக்களிடம் கட்டாயக்கடன் பெறவேண்டுமாம்!

திட்டத்திற்கு சந்தானம் கூறும் யோசனை!

சென்னை, நவ. 27—

நிதிக் குழுவின் முன்னாள் தலைவர் திரு. கே. சந்தானம் அவர்கள், ஜெயின் கல்லூரி மாணவரிடையே பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பேசியுள்ளார்.

பேராசைத் திட்டம் தீட்டி, பணமில்லாத நிலையில் திண்டாடும் இந்தியப் பேரரசுக்கு ஒரு புதிய யோசனை கூறியுள்ளார்.

இன்று வறுமையாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் வாழ்க்கையுடன் போராடிவரும் மக்களிடமே கட்டாயக் கடன் பெற அரசாங்கம் திட்டம் வகுக்க வேண்டுமாம்!

20 முதல் 40 வயதிற்கு உட்பட்ட எல்லோரும் ரூ. 1,000-க்குக் கட்டாயம் இன்ஷ்யூர் செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், அரசாங்கம் பல துறைகளில் பல காரியங்களில் ஈடுபடுவதை விட்டு முக்கியப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், உணவுப் பிரச்சினையை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று இந்தியா ஜனநாயக அடிப்படையில் இயங்குவதின் காரணமாகத் திட்டம் விஞ்ஞான ரீதியில் அமைவதற்கில்லை என்றும், முதல் திட்டத்திலேயே தொழில் முன்னேற்றத்தை வலியுறுத்தியிருக்க வேண்டும் என்றும், சமுதாய நலனைக் கருதி வரிவிதிக்கப்படுவதை மக்கள் வரவேற்க வேண்டும் என்றும் கூறி, மேலைநாட்டு மக்கள் தேசிய வருமானத்திலிருந்து 20-30 சத விகிதம் வரியாகத் தருகின்றனர் என்றும், இந்தியாவில் தேசிய வருமானத்தில் 6 சத விகிதமே வரியாக வசூலிக்கப்படுகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

டெல்லி - குமரி நெடுஞ்சாலை

நான்கு ஆண்டுகளில் முடிந்துவிடுமாம்

புதுடில்லி, நவ. 26—

டெல்லியையும் — கன்னியாகுமரியையும் இணைக்கும் நெடுஞ்சாலை 1961-ம் ஆண்டுக்குள் முடிந்துவிடுமாம்!

டெல்லியிலிருந்து அந்தச் சாலை, ஆக்ரா, ஷிவபுரி, ஜான்சி, நாகபுரி, பெகளூர், சேலம், மதுரை வழியாகக் கன்னியாகுமரியை இணைக்குமாம்.

வார்தாவுக்கும் ஹிங்கன்கன்காட் எனும் இடத்திற்கும் இடையேயும், ஐதராபாத்திற்கும்-கர்னூலுக்குமிடையேயும் சாலை இன்னும் முடிவடையவில்லையாம். இது இரண்டாம் திட்டகாலத்தில் பூர்த்தியாகிவிடுமாம். இதற்கு மொத்தம் ரூ. 40 இலட்சம் செலவாகுமாம்.

இப்போது, ஐதராபாத்தையும்—கர்னூலையும் இணைக்கும் சாலை அமைக்கப்பட்டு வருகிறதாம்; துங்கபத்திரா நதியில இதற்காகக் கட்டப்பட்டுவரும் பாலம் முடியும் தறுவாயிலிருக்கிறதாம். கிருஷ்ணா நதிமீது மேலும் ஒரு பாலம் இதற்காகக் கட்டப்படுமாம்.

இந்த டெல்லி—குமரி நெடுஞ்சாலையின் நீளம் 2,000 மைலுக்கும் சற்று அதிகமாம்!

ஐசனோவர் ஒய்வு பெறுவார்

நிக்சன் குடியரசுத் தலைவராவார்

அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர் மூளை நரம்பில் இரத்தக் கட்டு ஏற்பட்டு உடல்நலம் குன்றிக் கஷ்டப்படுகிறார். அவர் அடிக்கடி உடல் நலக் குறைவால் அவதிப்படுவதால் பதவியிலிருந்து விலகி ஒய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்தறிவித்திருக்கின்றனவாம்!

அவருக்குப் பதிலாகஇப்போது குடியரசின் துணைத் தலைவராக இருக்கும் நிக்சன், குடியரசுத் தலைவராகலாம் என்றும் கூறப்படுகிறது.

அண்மையில் நடைபெறவிருக்கும் 'நாட்டோ' (வடஅட்லாண்டிக் கூட்டு) தலைவர்கள் மாநாட்டில் ஐசனோவர் கலந்துகொள்ள முடியாது என்பதால், நிக்சனே அதில் கலந்துகொள்வார் என்றும் நிக்சன், ஐசனோவரின் பிரதிநிதி[...]

[...]கொள்வார் என்[...]றது.

[...]லைவரின் இராஜி[...]க அரசியல் சட்ட[...] ஏற்பாடுகள் நடை[...]ண்டும் என்றும், [...]ந்சநாள் தேவைப் [...]நிக்சன் குடியரசுத் [...]துணைத் தலைவராக [...]வரை எவரும் [...]ட்டார்கள் என் [...]டிற்குப் பதிலாக [...]ன் குடியரசுத் [...]து, துணைத் தலை[...]யாகத்தான் இருந் [...]றப்படுகிறது.

[...]வல்படி, நிக்சன் [...] அடுத்த தேர்த[...] கட்சியைச் சேர்ந் [...]க வர இயலாமற் [...]றும், ஜனநாயகக் [...]சேர்ந்தவரே தலைவ[...] என்றும் கூறப்படு[...]

[...]ராகவே கலந்[...]றும் கூறப்படுகி[...]

குடியரசுத் [...]ணமா பூர்த்திய[...] நீதியான சில [...] பெற்றால் வே[...] இதற்குக் கொ[...] படும் என்றும், [...] தலைவரானால், [...] அடுத்த தேர[...] நியமிக்கப்படம[...] றும், ரூஸ்வெ[...] முன்பு ட்ரு[...] தலைவரானபோ[...] வர் பதவி கால[...] தது என்றும் [...]

இந்தத் த[...] தலைவரானால், [...] வில் குடியரசுக் [...] தவர் தலைவர[...] போகும் என் [...] கட்சியைச் [...] ராக முடியும் [...] கிறது.

[...] தெரியுமா?

[...]டில்லி, நவ. 28—

[...] நிலுவையிலிருந்து [...]ண்டுத் திட்ட காலத் [...] கோடியும், 1956 [...]தியிலிருந்து 1957 [...]தம் முடிய ரூ. 418 [...]டுக்கப்பட்டிருக்கிற [...]மந்திரி டி. டி. கே. [...] தெரிவித்தார்.

எவ்வளவ[...]

பு[...]

ஸ்டர்லிங் [...] முதல் ஐந்தா[...] தில் ரூ. 138 [...] ஏப்ரல் 1-ந் தே[...] அக்டோபர் ம[...] கோடியும் [...] தென்று, நி[...] மக்கள்சபையி[...]

பிரெஞ்சு இராணுவத்தின் அக்கிரமம்

[...] அத்துமீறிப் பிரவேசம்

டுனீஸ், நவ. 21—

டுனீஷிய—அலஜீரிய எல்லையில் பிரெஞ்சுத் துருப்புக்களும், டுனீஷியத் துருப்புகளும் கைகலந்ததாக டுனீஷிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இரண்டு பிரிவு பிரெஞ்சு இராணுவத்தினர், அல்ஜீரிய எல்லையைத் தாண்டி டுனீஷிய எல்லைக்குள் 350 கெசமவரை வந்தனர் என்றும், அதன்பேரில் எல்லையைக் காப்பாற்றும் பொருட்டு பிரெஞ்சுத் துருப்புகளுடன், டுனீஷியத் துருப்புக்கள் மோதியதாகவும் அவர் கூறியுள்ளார்.

கைகலப்பில் ஏற்பட்ட சேதங்கள் பற்றித் தகவல் இல்லை.

இங்குள்ள பிரெஞ்சுத் தூதவர், தமக்கு எதுவுமே தெரியாது என்று கூறியிருக்கிறார்.

ஆந்திர ஆற்று நீர்

தமிழகத்திற்கு தர திட்டம்

ஐதராபாத், நவ. 27—

கிருஷ்ணா, கோதாவரி ஆற்று நீரை சென்னை மாநிலம் உபயோகித்துக் கொள்வது பற்றி, திட்டம் ஒன்று தயாரித்து மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் தருமாறு எல். வெங்கடகிருஷ்ண ஐயர், எச். சி. ஹரித்கார் என்ற இரு எஞ்சினியர்கள் கேட்கப்பட்டிருப்பதாக ஆந்திர முதன்மந்திரி என். சஞ்சீவ ரெட்டி கூறியிருக்கிறார்.

அல்ஜீரியாவில் தேர்தலாம்!

பார்வையாளர்களை அழைக்கப் போவதாக பிரெஞ்சு மந்திரிதகவல்

நியூயார்க், நவ. 27—

அல்ஜீரிய 'சட்டசபை'களுக்கு நடைபெறும் தேர்தல்களைக் காண, ஜனநாயக நாடுகளிலிருந்து தேவையான அளவு பார்வையாளர்களை அழைக்க பிரெஞ்சு சர்க்கார் உத்தேசித்திருப்பதாக, வெளிவிவகார மந்திரி பினுய் இங்கு கூறியுள்ளார்.

"தேர்தல்கள் நடத்தப்படும் நேரிய நோக்கத்தை, எவரும் சந்தேகிக்கக்கூடாது" என்பது தான் இதன் நோக்கம் என்றும் அவர், ஐ. நா. அரசியல் கமிட்டியிடம் கூறியிருக்கிறார்.

இந்தத் தேர்தல்களுக்குப் பிறகு, மக்கள் கருத்துப்படி அல்ஜீரியாவிற்கான அரசு முறை திட்டங்கள் நிர்ணயிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கைத்தறித் துணிக்குத் தரப்படும் கழிவுத் தொகையைக் குறைக்காதீர்

தனிப்பட்ட தறிக்காரர்களுக்கு உதவித் தொகை தாரீர்

சேவூர் கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கை

23—10—57 இரவு 7½ மணி அளவில், சுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சேவூர் (ஆரணி) கைத்தறி நெசவாளர் சங்கச் செயற் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாப்பிற்கு என்று கரை போட்ட வேட்டியும், கலர் புடவையும், கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டுமென்று சென்ற சட்டசபைக் கூட்டத்தில் தீர்மானம் வந்தபோது அதை எதிர்த்து வாக்களித்தவர்கள் செயலைக் கண்டு இச்சங்கம் வருந்துவதுடன், இனி சட்டசபையில் கைத்தறி நெசவாளர் பிரச்சினை வரும்போது கட்சி பாகுபாடின்றி உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறது.

கூட்டுறவு சொசைட்டியில் சேராத தனிப்பட்ட நெசவாளர்களுக்கு தறிக்கு வேண்டிய சாமான்கள் தயாரித்து தொழிலை நடத்துவதற்கு தறி ஒன்றுக்கு உதவித் தொகை ரூ. 50 அளிக்குமாறு கைத்தொழில் — வியாபார டைரக்டர் அவர்களையும், தொழில்—தொழிலாளர் கூட்டுறவு அமைச்சரவர்களையும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

★

12—11—57 இரவு 7 மணிக்கு நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க விற்பனை 'எம்போரியங்'களிலும், 'டிப்போ'க்களிலும், கூட்டுறவு விற்பனை சங்க நிலயங்களிலும் தற்போது ரூ. 1-க்கு 9 காசு 'ரிபேட்' (கழிவு) கொடுக்கப்படும்போதே கைத்தறித் துணிகள் தேக்கம் ஏற்பட்டிருக்கும் இந்நிலையில் டிசம்பர் 1-ந் தேதி முதல் ரூ. 1-க்கு 6 காசு மட்டுமே கழிவு தரவேண்டுமென்ற முடிவு நடைமுறைக்கு வந்தால் கைத்தறித் துணிகள் விற்பனை மிகவும் குறைவதுடன் கைத்தறி நெசவாளர்களின் நிலைமை சீர்குலையும்; அதனால், மாநில கைத்தொழில்—தொழிலாளர் — கூட்டுறவு அமைச்சர் அவர்களும், மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமும் மத்திய சர்க்காரையும், மத்திய கைத்தறி போர்டையும் கலந்து, தற்போது 9 காசு கழிவு அளிக்கப்படும் முறையை நீடிக்க வேண்டுமென இச்சங்கம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு பாவு 1-க்கு—அதாவது, 44 அங்குலம் அகலமுள்ள 120 கெசம் நீளமுள்ளதற்கு கூலி ரூ. 22·50 கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் ஒரு மாதம் வாழ வேண்டியிருப்பது மட்டுமல்லாமல், விலைவாசி மிகவும் உயர்ந்துகொண்டு போவதால் மேற்கண்ட பாவு ஒன்றுக்கு கஞ்சி (பசை) போடுவதற்கு வேண்டிய கேழ்வரகு 3 படி தேவைப்படுகிறது; அதை மார்க்கெட்டில் வாங்குவதென்றால் விலை அதிகரிப்பதுடன் கஞ்சி போட்டு எடுப்பதற்கு பாவு 1-க்கு செலவு ரூ. 4·75 போக மீதி ரூ 17·75 மட்டும் வைத்துக்கொண்டு குடும்பம் நடத்த முடியாத நிலையில் இருக்கும் இவ்வூர் நெசவாளர்களுக்கு ஒரு நியாய விலைக் கடை ஆரம்பிக்குமாறு மாவட்டக் கலெக்டர் அவர்களை இச்சங்கம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

சொந்தத் தொகுதியில் அமைச்சருக்குக் கருப்புக்கொடி

மதுரை, நவ. 28—

சென்னை மராமத்து இலாகா அமைச்சர் திரு. பி. கக்கன் நேற்று நாணியமங்கலம் சென்றபோது மக்கள் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

முத்துராமலிங்கத் தேவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும், கலவரம்பற்றி நீதிமன்ற விசாரணை வேண்டும் என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

23 பேர்களைப் போலீசார் கைது செய்துள்ளனராம்.

கேரள மாநிலத்தில் கயிற்றுத் தொழில்

அதிகத் தொகை ஒதுக்குமாறு மாநில சர்க்கார் கோரிக்கை

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கயிற்றுத் தொழிலுக்கு மேலும் அதிகப்படியான தொகை ஒதுக்கும்படி கோரி திருத்தப்பட்ட திட்டமொன்றை, கேரள சர்க்கார், திட்டக் குழுவுக்கு அனுப்பியிருக்கிறார்களாம்!

கயிற்றுத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் மொத்தத் தொகையான, 100 இலட்ச ரூபாயிலிருந்து, கேரளத்திற்கு ரூ. 40 இலட்சம் ஒதுக்கியது உண்மையே என்றும், கேரள சர்க்கார் ஆரம்பத்தில் ரூ. 150 இலட்சம் கேட்டார்கள் என்றும் அதற்குப் பிறகு, தங்கள் கோரிக்கையைத் திருத்தியதில் அது 246 இலட்சம் ரூபாய்க்கு வந்திருக்கிறது என்றும், இதற்காக நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களை அணுகுமாறு திட்டக் குழு கேரள சர்க்காருக்கு யோசனை கூறியது என்றும் மக்கள்சபையில் தகவல் தரப்பட்டது.

இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள்

★

தேனீ :

16—10—57-ல் தேனீயில் இந்தியை எதிர்த்து ஊர்வலம் நடைபெற்றது; கழகக் கொடிகளைக் கையில் ஏந்திக்கொண்டு மெயின் பஜார் பட்டித் தெரு, பங்களாப் பட்டி, மதுரை ரோடு இவைகளின் வழியாக ஊர்வலம் சென்று மணிக்கூண்டுக்கருகிலுள்ள கொடி மரத்தண்டை கூடி, இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களைப் படித்து மக்களுக்கு இந்தியின் ஆதிக்கம் குறித்து விளக்கப்பட்டது. ஊர்வலத்திற்கும், கூட்ட நிகழ்ச்சிக்கும் நகர தி. மு. கழகச் செயலாளர் ஆ. கருப்பையா தலைமை வகித்தார்; சோ. வெற்றி அரசு தீர்மானங்களைப் படித்தார்; தோழர் மு. தங்கராசனால், 1938-ல் இந்தி எதிர்ப்பின்போது சிறை சென்று — துன்பத்திற்கு ஆட்பட்ட தோழர்களான ஆ. கருப்பையா, த. துரைராசன் ஆகியோருக்கு மலர் மலர் மாலைகளணிவிக்கப்பட்டது. ஊர்வலத்தில் தோழர்களும், பொதுமக்களும், அனுதாபிகளும், நெடுஞ்செழியன் மன்றத் தோழர்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டார்கள்.

குடந்தை :

மேலக்காவேரி அறிவொளி மன்றச் சார்பில் 13—10—57-ல் மலேயா தோழர் யா. சபூர் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்தியைக் கண்டித்துத் தோழர்கள் இரா. குப்புசாமி, அ. பாலசுந்தரம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசியபின் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூன்றுங்கட்டளை :

13—10—57 மாலை 4 மணிக்கு இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மு. அ. தாமோதரன் தலைமை வகித்தார். தோழர்கள் மு. சி. முனிசாமி, மு. மு. ஆறுமுகம், மு. ச. கணபதி ஆகியோர் இந்தியைக் கண்டித்துப் பேசியபின், தோழர் மு. சி. முனிசாமி அவர்கள் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை வாசித்து நிறைவேற்றினார்.

திருவாடானை :

13—10—57-ல் தோழர் ச. பி. சுவக்கீன் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டத்தில் தோழர்கள் சி. கருப்பையா, அ. சாலைமுத்து, க. பெருமாள் ஆகியோர் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் பேசி ஏகமனதாக நிறைவேற்றினார்.

வில்லிவாக்கம் :

13—10—57 மாலை 6 மணிக்கு தோழர் மு. சு. மணி தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது; 'இந்தியை நாம் ஏன் எதிர்க்கிறோம்' என்பதைப்பற்றி தோழர்கள் மதிவண்ணன், பலராமன் ஆகியோர் பேசியபின் செயலாளர் செ. தாமோதரன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் இந்தி புகுத்தப்படும் முறையை விளக்கினார்; பின்னர் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

36-வது வட்டம் (சென்னை):

13—10—57 காலை 9 மணிக்கு மா. இளங்கோ தலைமையில் கிளைக் கழகச் செயற்குழு கூடி இந்தி கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியது.

49-வது வட்டம் (சென்னை):

கோட்டூர், அடையாறு கே. வி. கே. சாமி படிப்பகப் பணிமனையில் தோழர் தி. சு. கிள்ளிவளவன் தலைமையில் 20—10—57-ல் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் இந்தியை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவான்மியூர் (சென்னை):

சென்னை — திருவான்மியூர் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் 31—10—57-ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மூலக்கரை :

11—11—57 மாலை 6 மணிக்கு மூலக்கரை கிராமச்சாவடியில், தோழர் கே. பி. எஸ். நடராசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தென்னாட்டில் பலாத்காரமாக இந்தியைத் திணிப்பதை வன்மையாகக் கண்டிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்தூர் (சேலம்):

13—10—57 காலை 9 மணிக்கு தி. மு. க. சார்பில் இன்னிசை முழங்க வாத்தியங்களுடன் இந்தியை விரட்டுவதுபோன்ற நடன நிகழ்ச்சிகளுடன் இந்தி எதிர்ப்பு ஒலிமுழக்கங்களுடன் ஊர்வலம் நடைபெற்றது. பிறகு மத்தூர் எம். ஆர். நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ம. ச. சண்முகம், மற்றும் பலர் பேசியபின் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேட்டுப்பாளையம் (தஞ்சை)

13—10—57 மாலை நடைபெற்ற தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேயிலை வாணிபத்தை இலங்கை கைப்பற்றுகிறது!

இந்தியத் தேயிலைக்குக் கிராக்கி குறைந்துவருகிறது

நியூயார்க், நவ. 25—

இந்தியாவுக்கு இலாபம் தேடித் தரும் ஒரு சிறந்த வணிகப் பொருளாக இருந்துவந்த தேயிலையின் மதிப்பும், வெளிநாடுகளில் அதன் மீது மக்களுக்கிருந்த விருப்பமும் குறைந்துவருகிறது.

குறிப்பாக அமெரிக்காவுக்கு, அதிக அளவுத் தேயிலையை இந்தியா ஏற்றுமதி செய்து வந்துள்ளது.

சமீப காலமாக அமெரிக்கர்கள் தேநீர் அருந்தும் பழக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தும், இந்தியத் தேயிலையின் மதிப்பும், அதற்கான கிராக்கியும் குறைந்து வருகிறதாம்.

இலங்கை போட்டியிடுவதின் காரணமாக இரண்டு ஆண்டுகளாக இந்தியா தேயிலை ஏற்றுமதியில் ஏமாற்றமடைந்து வந்துள்ளது.

சென்ற ஆண்டில், 320 இலட்சம் பவுண்டு இந்தியத் தேயிலை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது; ஆனால் இந்த ஆண்டில், 200 இலட்சம் டன் தேயிலை மட்டுமே ஏற்றுமதியாகியுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை நிலையில், தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைத்துவந்த வருமானத்தையும் இந்தியா இழந்துவருவது குறிப்பிடத்தக்கது.

1955-ல் 240 இலட்சம் டாலர் கிடைத்தது; ஆனால், 1956-ல் 160 இலட்சம் டாலர் மட்டுமே கிடைத்துள்ளது.

இலங்கை குறைந்த விலையில் தரமுள்ள சரக்குகளைத் தருகிறதாம்.

இந்திய வியாபாரிகள், தேயிலையின் தரத்தை நிலையாக வைத்திருப்பதில்லையாம்!

மேலும், இந்தியாவின் ஏற்றுமதி வரியும் இதனை வெகுவாகப் பாதித்துள்ளதாம்.

முட்டை அடைகாக்க மின்சார சாதனம்

சென்னைக்குக் கிடைத்ததா ?

புதுடில்லி, நவ. 27—

முட்டைகளைச் செயற்கை முறையில் அடைகாக்கும் 400 மின்சார சாதனங்கள் பல்வேறு மாநிலங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளனவாம் !

அந்தச் சாதனம் ஒவ்வொன்றிலும் ஒரே சமயத்தில் 450 முட்டைகளைவைத்துச் செயற்கை முறையில் அடைகாக்கச் செய்ய முடியும். அந்தச் சாதனங்கள் டி. சி. எம். திட்டப்படி அமெரிக்காவிடமிருந்து இந்திய சர்க்காருக்குக் கிடைத்துள்ளன.

இதன் மூலம், ஆண்டுக்கு குஞ்சு பொரிக்கும் சக்தி 3,78,000 குஞ்சுகளிலிருந்து 10,50,000 குஞ்சுகளாக அதிகரிக்கும்.

அதோடுகூட, கோழித் தீவனங்களைத் தயாரிப்பதற்காக ஐந்து இயந்திரங்கள் டில்லி, பூனா, பெங்களூர், ஹரிங்கட்டா ஆகிய இடங்களிலுள்ள சர்க்கார் கோழிப் பண்ணைகளில் நிறுவப்பட்டுள்ளன. அந்த இயந்திரங்களில் தயாரிக்கப்படுகிற தீவனங்கள் சர்க்கார் பண்ணைகளுக்கு மட்டுமின்றி, பொதுமக்களுக்கும் 'இலாபமுமில்லை—நஷ்டமும் இல்லை' என்னும் அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

டெல்லி, பூனா, பெங்களூர், ஹரிங்கட்டா, கல்லாஹி (சிம்லா) ஆகிய ஐந்து இடங்களிலுள்ள வட்டாரப் பண்ணைகளில் பெரிய அளவிலுள்ள 30 அடைகாக்கும் சாதனங்கள் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அவை சீக்கிரமே அமெரிக்காவிலிருந்து வந்து சேரும்.

கோழிகளைப் பெருமளவில் உற்பத்தி செய்வது, செயற்கைமுறையில் அடைகாக்கும் சாதனங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதையும், செயற்கை அடைகாக்கும் முறையைப் பலப்படுத்துவதையுமே பெரிதும் பொறுத்திருப்பதால், கோழி அபிவிருத்தியில் இத்தகைய செயற்கை முறைகளைக் கையாளுவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நடுத்தர வருமானக்காரர்களுக்கு

வீடு கட்டும் திட்டம்

அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, நவ. 26—

நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கான வீடு கட்டும் திட்டமானது, பார்லிமெண்டின் சமூக சேவைக் குழுவின் (வீட்டு வசதிக்கான துணைக் குழு) சிபாரிசின் மீது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டதாக மக்கள்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் அல்லது இனி ஏற்படக்கூடிய வீடுகள் நிதிக் கார்ப்பரேஷன் ஆகியவைகளிலிருந்து கிடைக்கும் கடன் வசதியை மாத்திரமே முழு அளவில் பயன்படுத்தி நடுத்தர வருமான வகுப்புகளுக்கு வீடு கட்டித் தருவதற்கான மாற்றுத் திட்டமொன்றை வகுப்பதுபற்றி இந்திய சர்க்கார் யோசனை செய்துவருகிறார்களாம்.

கள்ளக்குடியேற்றத்தைத் தடுக்க நடவடிக்கை

சென்னை, நவ. 26—

இலங்கைக்குக் கள்ளத்தனமாகக் குடியேறுவதைத் தடுக்க, வெளியேற்ற கட்டுப்பாடு இலாகாவினர் அக்டோபரில் நடத்திய 34 சோதனைகளில் 93 நபர்கள் பிடிபட்டனர். 24 தரகர்கள், படகு சொந்தக்காரர் ஒருவர், மற்றும் 3 பேர்களும் சோதனைகளின்போது பிடிபட்டனர்.

கள்ளக் குடியேற்ற நபர்கள் என இலங்கை சர்க்காரால் பிடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட 127 நபர்கள் தனுஷ்கோடி வந்து சேர்ந்தனர். அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின்பேரில் 20 தரகர்கள், 11 குடியேற்ற நபர்கள், 3 படகோட்டிகள், படகுச் சொந்தக்காரர் ஒருவர் பிடிபட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நெல்லைக் கல்லூரியில்

இந்தித் திணிப்புக்குக் கண்டனம்

நெல்லை, ம. தி. தா. இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கச் சார்பில் மாணவர் தலைவர் கு. சேதுராமலிங்கம் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. சுந்தரம் 'இலட்சியத்தில் சிந்தனையாளர்கள்' என்னும் பொருள் பற்றியும், தமிழ் ஆசிரியர் திரு. சி. சுப்பிரமணியன் 'நாடும் மொழியும்' என்னும் பொருள் பற்றியும் பேசுகையில் இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்தார்கள்; 'தாய் மொழியைக் காக்க மாணவர்கள் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். செயலாளர் மு. நூர்மைதீன் நன்றி நவின்றார். துவக்கத்தில் ஆர். கார்மேகம் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

வீதிதோறும் அறப்போர் பாசறை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறீர்கள். நீங்கள் போட்ட ஓட்டு தமிழ் நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்னும் பெயர் வேண்டாம் என்று கூறுபவருக்கு—கைத்தறி வேண்டாம் என்று சொல்லுபவருக்குப் பயன்பட்டுவிட்டது.

"'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க வேண்டும் என்று நாங்கள் கூறி, 'கூடாது' என்று காங்கிரஸ்காரர்கள்கூறி, பிறகு ஓட்டெடுத்தபோது நீங்கள் எந்த அம்மையாரை நம்பி சட்டசபைக்கு அனுப்பிவைத்தீர்களோ அந்த அம்மையார், உங்கள் நம்பிக்கைக்கு மாருக — தமிழ்நாடு பெயர் வைக்கக்கூடாது என்பதற்கு ஆதரவாக ஓட்டளித்தார்.

"தோழர் நடராசன் வெற்றி பெறவில்லையே என்பதற்கு நான் இதைச் சொல்லவில்லை; நீங்கள் உங்களுக்கிருந்த நல்வாய்ப்பைப் பெறத் தவறிவிட்டீர்கள் என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். நீங்கள், தோழர் நடராசனை அனுப்பி, தமிழ் நாடு பெயர் வைக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக அவர் கரம் உயர்ந்திருக்குமானுல், நீங்கள் அளித்த ஓட்டுகளை நினைத்துப் பெருமைப் பட்டுக்கொள்ள முடியும்.

"தமிழ் நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்ற பெயர் கிடைக்கவில்லை; மேலும், நம் மொழியையும் அழிக்கிறவிதத்திலே இன்று இந்தியைப் புகுத்தும் திட்டத்துக்குக் காங்கிரஸ் அமைச்சர்கள், 'ஆதரவு தருவதா, எதிர்ப்பதா?' —என்று புரியாமல், மதில்மேல் பூனைபோல இருக்கிருர்கள்!

"கல்வித் திட்டத்தில், மாணவர்கள் மூன்று மொழிகளைப் படித்தே ஆகவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பள்ளியிலேயுள்ள இளம் சிட்டு—வருங்கால மன்னர்கள்—ஒரு அரும்பு—மூன்று மொழிகளைப் படித்துத் தீரவேண்டும்; இதற்கு என்ன அர்த்தம்? 'இந்தி புகுத்தப்படவில்லை' என்று கூறுபவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். பால் சாப்பிடுகிறவனிடம் சென்று, 'கொஞ்சம் விஷமும், அக்கினித் திராவகமும் சேர்த்துச் சாப்பிடு' என்பது போலத்தான் தமிழ், ஆங்கிலத்துடன் இந்தியையும் சேர்த்துப் படிக்கச் சொல்லும் திட்டம்!

"இந்தியாவிலே இந்தியல்லாத வேறு பகுதிகளிலும் இந்திதான் ஆட்சிமொழி; உத்தியோகம் பார்க்கும் அரசாங்க ஊழியர்கள் இந்தி கற்றுத்தான் ஆகவேண்டும்; வாணிபத் தொடர்புக்கும் இந்திதான் இருக்கப் போகிறது—என்று சொல்லி, இந்தி படிக்கச் சொல்லுகிருர்கள். உள்ளத்தைக்காட்டியல்ல—வயிற்றைக்காட்டிச் சொல்லுகிருர்கள், இந்தி படிக்கவேண்டுமென்று! 'இந்தி இஷ்ட பாடம்தான்; ஆனுல், அதைப் படித்தால்தான் வேலை' என்று கூறினுல், ஏழைமகன், என்ன செய்வான்? வயிற்றுக்குச் சோறு தேடுகிறவன் என்ன செய்வான்?—இந்தியைப் படித்துதான் தீருவான்! கால்வயிற்றுப்பாட்டுக்குத் தன் அருமந்த செல்வனை நம்பியிருக்கிருர்கள், பெறருேர்கள்!

"எப்படியும், இன்று இல்லையேல் நாளை வரப்போகும் தமிழகத்தில்—ஆர்த்தெழுகின்ற கொந்தளிப்பை கொஞ்சகாலத்துக்குத் தள்ளிவைத்துக்கொள்ளலாம் என்று சொல்வதுபோல—இன்னும் கொஞ்சம் பின்னுல் இந்தியைக் கொண்டுவரலாம் என்று கூறும் வடநாட்டுக் கங்காணிகளும் இருக்கிருர்கள்.

"இந்தியை நாம் எதிர்ப்பதற்கும், ஆச்சாரியார் எதிர்ப்பதற்கும் வேறுபாடு உண்டு—'ஏகபாரதம்' என்பதை ஒத்துக்கொண்டு எதிர்க்கிருர் அவர்! நாம், வடவடநாட்டுத் தொடர்பே வேண்டாம் என்று கூறி எதிர்க்கிருேம்.

"ஜனநாயகக் காங்கிரஸ் கட்சி என்னும் காங்கிரஸ் சேர்திருத்தக் கட்சியினரும், 'இந்தி அறவே வேண்டாம்' என்கிறவர்களல்ல! 'பெண்ணுக்கு, கல்யாணமாகுமளவுக்கு இன்னும் வயதாகவில்லை' என்று சொல்வதைப் போல அவர்கள், 'இந்தி இன்னும் தகுதி பெறவில்லை' என்றுதான் சொல்லுகிருர்கள்.

"இராமாயணத்திலே, நிராயுதபாணியாகிவிட்ட இராவணனைப் பார்த்து இராமன், 'இன்று போய் நாளை வா' என்று கூறியதாகக் கம்பன் வர்ணிக்கிருனே, அதைப் போல இவர்களெல்லாம், 'இந்தியே, நீ இன்று போய் நாளை வா' என்றுதான் கூறுகிருர்கள்; நாமோ, 'இன்று போ; இனி என்றுமே வராதே' என்கிருேம்.

"எங்கள் அறிவு, ஆற்றல், வீரம், மொழி, கலை, பண்பாடு அத்தனையும் வேறு; உனக்கும் எங்களுக்கும் உள்ள மாறுபாடுகளை—வேறுபாடுகளை எடுத்துக் கூறி, ஆதாரங்களை அள்ளி வீசிய பின்பு—'நீ எங்களுக்கு அன்னியன்; உன் காலடியில் இருக்க மாட்டோம்' என்று கூறிவிட்ட பிறகு—'இந்தியை நீங்கள் படித்துத்தான் ஆகவேண்டும்' என்று நம்மைப் பார்த்துச் சொன்னுல் என்ன பொருள்?

"'எங்கள் நாடே வேறு; உன் நாட்டுக்கும் எங்கள் நாட்டுக்கும் சம்பந்தமில்லை' என்று சொன்ன பிறகு, பொது மொழி ஏன்?

"அவர்கள் — வட நாட்டவர் ஏகாதிபத்திய வழி வந்தவர்கள்; அடிப்படையிலேயே நமக்கும் அவர்களுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன.

"நம் நாட்டை ஆள, நமது தாய் மொழியாம் தமிழ் இருக்கிறது; பிற நாட்டுத் தொடர்புக்கு ஆங்கிலம் இருக்கிறது; எனவே, எங்களுக்கு இந்தி வேண்டாம் என்கிருேம்.

"ஆச்சாரியார் என்ருல் சாதாரணமானவரல்ல; சாணக்கியர் என்று புகழப்படுபவர்; அவருக்குத் தலையெல்லாம் மூளை—மூளையெல்லாம் சிந்தனை—சிந்தனையெல்லாம் வஞ்சனை! அப்படிப்பட்ட ஆச்சாரியாரையே எதிர்த்து முன்புவெற்றிக்கொடிநாட்டியிருக்கிருேம்; அண்ணு அவர்கள் திருவண்ணுமலை மாநாட்டில் கூறியது போல, அம்மியே ஆடிக் காற்றில் பறந்தபோது, இந்த இலவம் பஞ்சுகள் எம்மாத்திரம்?

"மீண்டும் இப்பொழுது இந்தி புகுத்தப்பட்டால், அதை எதிர்க்க இலட்சோப இலட்சம்பேர் தயாராயிருக்கிருர்கள். கரத்திலே கழகக் கொடி ஏந்தி அறப்போர்க்களத்திலே இறங்கத் தயாராயிருக்கிருர்கள்.

1938-ல் — இருபதாண்டுகளுக்கு முன்பு—பால்ய குமரியாக இங்கு வந்தாள் இந்திப் பெண்; அந்தக் கட்டிளம் பருவமங்கையையே ஏற்க மறுத்து விரட்டியடித்தார்கள் இங்குள்ள தமிழர்கள்.

இருபதாண்டுக்கு முன்வந்த இளமங்கையையிடமே மயங்கவில்லை தமிழ் வாலிபர்கள். இப்பொழுது—இருபதாண்டுக்குப் பிறகு—இன்று இளமை குன்றி கிழவியாகவரும் அந்த இந்திப் பெண்ணிடமா மயங்கிவிடுவார்கள்? மயங்கிவிடுவார்கள் என்ற தைரியம் அவர்களுக்கு இருக்கிறது; அதனுல்தான் இந்தியைப் புகுத்தப் பார்க்கிருர்கள்.

"நமது போராட்டம் இந்தித் திணிப்பை ஒழிக்கும் போராட்டமாக மட்டும் இருக்காது; வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு எச்சரிக்கைதரும் கடைசி போராட்டமாகவும் இருக்கப்போவது உறுதி.

"போராட்டம் என்ருல், தி. மு. கழகம் பலாத்காரத்திலிறங்காது; கத்தியும் கேடயமும் எடுத்துக் களத்திலிறங்காது. தி. மு. கழகம், ஜனநாயகம் பூத்துக் குலுங்கும் சோலை; பலாத்காரத்தின் வாடை, அதில்எள்ளளவும் வீசாது.நாம் அறப்போர்கள் பல நடத்தி வெற்றி கண்டிருக்கிருேம்.

(பேச்சு முடியவில்லை)

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

டிசம்பர்

1 : தியாகதுருக்கம்
4 : குன்றத்தூர்
5 : பனமரத்தொட்டி—சென்னை
7 : 9-வது வட்டம்—சென்னை
8 : சென்னை மாலை—பொதுக் கூட்டம்
இரவு—நாடகத் தலைமை
9 : திருச்சிணம்புண்டி
10 : கொரடாச்சேரி
12 : குருவாரெட்டியூர்
13 : கீரனூர் (பழனி)
14 : லால்குடி
15 : திண்டுக்கல்
16 : கல்லல்
18 : பழையகும்முடிபூண்டி
19 : வைத்தியலிங்கசத்திர மேட்டூர்
22 : தஞ்சை
23 : காளப்பநாய்க்கன்பட்டி
24 : சேலம்
25 : திருவெண்காடு
28, 29 : நாகர்கோயில் மாநாடுகள்

சென்னை—வண்ணையம்பதி

நாவலர் படிப்பகத்

திறப்பு விழா

1—12—57 மாலை 6 மணிக்கு வண்ணையம்பதி சிரங்கம்மாள் தெருவில் (தியாகராயர் கல்லூரி பின்புறம்) தோழர் ஜி. இராசபாதர் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., என். சீவரத்தினம், கோ. இறைமுடிமணி, எம். சத்தியநான், வி. டி. அரசு, சு. மணியரசு ஆகியோர் பேசுவர். இராதாமாணிக்கம் இன்னிசையுண்டு.

சென்னை—நூனை சௌந்திர-பாண்டியனுர் நினைவுப் படிப்பக பொது உறுப்பினர்கட்கு

1—12—57 காலை 9 30 மணியளவில் படிப்பக மனையில் தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; பொருள்: 'ஆண்டு விழாவும் — பொங்கல் விழாவும்'

வழக்கம்போல ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சில தனிப்பட்டவர்களின் மிக முட்டாள்தனமான காரியங்களைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை; ஆனுல், விஷயம் தெரிந்த சிலர்கூட இந்தச் செயல்களை, வாளா விருப்பதின்மூலம் அங்கிகரிப்பதைக் கண்டே நான் கவலைப்படுகிறேன்" என்ருராம்!

"சென்னை மாநிலத்தைப் பொறுத்த விவகாரம் என்றுலும் மத்திய சர்க்காருக்கு இதில் நிச்சயமாக அக்கறை உண்டு" என்றும் பண்டிதர் கூறினுராம்!

சென்னை மேயர் தேர்தல்

சென்னை, நவ. 28—

சென்னை நகரசபையில் உள்ள 78 மொத்த உறுப்பினர்களில் 51 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

நகரசபைத் தலைவர் தேர்தல் நாளை மறுநாள் நடைபெற உள்ளது. இன்று, காங்கிரஸ் கட்சி சார்பாக தலைவர் தேர்தலுக்கு அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கக் கூட்டம் கூட்டப்பட்டது;

தலைவர் தேர்தலுக்கு திருமதி தாரா-செரியன், டாக்டர் சந்தோஷம் இருவரும் போட்டியிட்டனர்.

இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்று, திருமதி தாரா-செரியனுக்கு 28 வாக்குகளும், டாக்டர் சந்தோஷத்திற்கு 21 வாக்குகளும் கிடைத்தன.

கழகக் கூட்டங்கள்

★

தியாகதுருக்கம்

வள்ளுவர் திடலில்
1—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர் :
எம். ஆனந்தன் எம்.எல்.ஏ.
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சி. நடராசன் எம்.எல்,ஏ.

★

வண்டிப்பெரியார்

(கேரளம்)
1—12—57 அன்று
பேசுவோர் :
மு. கருணுநிதி எம்.எல்.ஏ.
கே. எச். எம். சுபேர்
கே. ஏ. கலையழகன்

★

கௌடன்பேட்டை

(பெங்களூர்)
சிக்கலால் பாக்கில்
1—12—57 மாலை 5½ மணிக்கு
தலைவர்: என். இரங்கராசன்
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
குமார வெங்கண்ணு
ஜி. கிருட்டினன்

★

இரியூர்

(கர்நாடகம்)
கழக மனைக்கு எதிரில்
2—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : கே.பி.முகம்மதுஅனீபா
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
குமார வெங்கண்ணு

★

திண்டுக்கல்

பூச்சிநாய்க்கன்பட்டி
அண்ணு திடலில்
1—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். பிச்சை
பேசுவோர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
என். முத்து
பி. சமதர்மம்

★

சீதாழிப்பாறை

தி. மு. கழகக் கிளை ஆண்டுவிழா
1—12—57 பகல் 2 மணிக்கு
தலைவர்: இராயப்பன்
பேசுவோர் :
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஜே. பி. ஜெபக்கனி

★

தேனி

கிழக்குச் சந்தையில்
2—12—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
மு. கருணுநிதி எம்.எல்.ஏ.
வி. வி. குருசாமி

★

கம்பம்

வ. உ. சி. திடலில்
2—12—57 மாலை 4 மணிக்கு
பேசுவோர் :
என். வி. நடராசன்
மு. கருணுநிதி எம்.எல்.ஏ.
கே. எச். எம். சுபேர்
கே. ஏ. கலையழகன்
தம்பித்துரை

★

வேலூர் (வ. ஆ)

(28-வது வட்டம் வேலப்பாடி தி. மு. கழக 4-ம் ஆண்டுவிழா)
பாட்டை வீதியில்
1—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வே. மா. பா. சாரதி
பேசுவோர் :
இரா. செழியன்
மா. கி. தசரதன்
ஆர். எஸ். பாண்டியன்

★

அறந்தாங்கி

வ. உ. சி. திடலில்
30—11—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
என். வி. நடராசன்
மு. க. மீரா
ஆ. துரையரசன்
கலாநேசன்
இன்னிசை : மஜீத்

தெ. ஆ. மாவட்ட

தி.மு.க. செயற்குழு கூட்டம்

"1—12—57 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு, விருத்தாசலம் 'முசாபரி பங்களா'வில் தென் ஆற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் மாவட்ட மூன்ருவது அரசியல் மாநாடு சம்பந்தமாக ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

"இக்கூட்டத்திற்கு மாவட்டப் பிரதிநிதிகள் அவசியம் தவருது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

என்று, தென்னுற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிருர்.

சென்னை 24-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

30—11—57 மாலை 7 மணிக்கு சென்னை 24-வது வட்ட தி.மு.க. படிப்பகத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

பெங்களூர்—சீராமபுரம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

1—12—57 காலை 10 மணிக்கு பெங்களூர்—சீராமபுரம் தி. மு. க. கிளை பணிமனையில் மேற்படி கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

30—11—57 மாலை 6 மணிக்கு சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (10, லாயர் சின்னதம்பி முதலி தெரு), தோழர் ம. வ. சிவபூ...ணம் தலைமையில், 'தமிழர் திருமணம்' என்ற பொருள் பற்றிப் பலர் பேசுவார்கள்.

* * *

1—12—57 காலை 10 மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றப் பணிமனையில், தோழர் பே. தா. இன்மொழியன் தலைமையில் தோழர்கள் அண்ணப்பன், ச. சிவகுமாரன், கே. பாலசுந்தரம் ஆகியோர் 'மேடைப்பேச்சு' என்பதுபற்றிப் பேசுவர்.

* * *

1—12—57 காலை 10 மணியளவில் சென்னை—ஆலந்தூர் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் இரா. கோதண்டராமன் தலைமையில் தோழர்கள் கே. எஸ். புகாரி, இராவணன், கோவிந்தராசு ஆகியோர் பேசுவர்.

* * *

1—12—57 மாலை 6 மணிக்கு, சென்னை—கோடம்பாக்கம் புலியூர் அறிவு வளர்ச்சி மன்றத்தில் தோழர் தரணி தலைமையில் தோழர்கள் கோ. மணிமுடி, பொ. இ. அமுது ஆகியோர் பேசுவர்.

* * *

1—12—57 காலை 10 மணிக்கு, பிராட்வே 4/88-ம் எண்ணுள்ள 11-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சு. அன்புக்கரசு தலைமையில் 'நாடும் - ஏடும்' எனும் பொருள் பற்றிக் கழகத் தோழர்கள் பேசுவர்.

சென்னை 27-வது வட்ட தோழர்களுக்கு

சென்னை 27-வது வட்டம் ஏரை சந்தப்பன் வீதி, 33-எண்ணுள்ள மனையில் இதுவரை இயங்கிவந்த அறிவியக்க மன்றம், 1—12—57 முதல் அனுமந்தராயன் கோவில் தெரு, 33 எண்ணுள்ள மனையில் இயங்கும் என செயலாளர் ஆ. இராசன் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.